கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 16397/அ1/2024 நாள் 11.12.2024

பொருள்- தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக்கல்வித்துறை - இளநிலை உதவியாளர் - கடலூர் மாவட்டம் - குணவாசல் அரசு உயர்நிலைப் பள்ளி - திருந.வெங்கட்ராஜன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடல் தொடர்பாக.

பார்வை-
1. அரசாணை (நிலை) எண். 101 பள்ளிக்கல்வி (பட்ஜெட்-1) துறை நாள். 18.05.2018
2. அரசாணை (நிலை) எண். 151 பள்ளிக்கல்வி (பட்ஜெட்-1) துறை நாள். 09.09.2022.
3. சென்னை- 03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடித எண். 1975/PSD/C2/2023 நாள். 25.08.2023.
4. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண். 56703/அ4/இ1/2023 நாள். 21.09.2023.
5. கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 12726/அ1/2023 நாள். 27.09.2023
6. குணவாசல் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் கடிதம் ந.க.எண். 41/2024 நாள். 05.11.2024.

---

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV இன் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை 5 இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி திருந.வெங்கட்ராஜன் என்பாருக்கு கடலூர் மாவட்டம், குணவாசல் அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிக நியமனம் ஆணை வழங்கப்பட்டு 29.09.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணியாற்றி வரும் மேற்காண் பணியாளருக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் 29.09.2023 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுப்பின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

1. பணிவரன்முறை ஆணையானது மாண்பமை சென்னை/ சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் இந்நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள தொகுதிIV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டதாகும்.

2. இப்பணியாளர் மூன்றாண்டுத் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவர்.
3. தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சினையும் துறைத் தேர்வான தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்பெற வேண்டும். மேலும், தனியருடைய தகுதிக்காண் பருவம் அதிகப்படியாக 5 ஆண்டுகள் வரை மட்டுமே நீட்டிக்கப்படும் எனவும், துறைத் தேர்வில் இக்காலத்திற்குள் தேர்ச்சிப் பெறத் தவறினாலும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுவதில் (நிருவாகக் காரணம் தவிர்த்து) தனியரால் காலதாமதம் ஆகும் நேர்வுகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தணைகள்) சட்டம் .2016 பிரிவு 33 (4) இன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| தேர்வாணைய பட்டியல் வ.எண். | பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி | பணியில் சேர்ந்த நாள். | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 122 | திருத.வெங்கட்ராஜன் இளநிலை உதவியாளர். அரசு உயர்நிலைப் பள்ளி, குணவாசல். | 29.09.2023 முற்பகல் | 29.09.2024 முற்பகல் |

இணைப்பு-பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
கடலூர்.

1/2

பெறுநர்
திருத.வெங்கட்ராஜன்
இளநிலை உதவியாளர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
குணவாசல்.
கடலூர் மாவட்டம் (உரிய வழியாக)

நகல்- தலைமையாசிரியர். அரசு உயர்நிலைப் பள்ளி. குணவாசல். கடலூர் மாவட்டம்.

Sys 1\ D:\2024\A1 2024\Regularisation\ Reg JA